தினமணி

**விருதுநகர் மாவட்ட வேளாண் திட்ட அறிக்கை: ஆட்சியர்**

First Published : 25 Apr 2010 07:00:36 AM IST
Last Updated : 25 Apr 2010 10:13:27 AM IST

விருதுநகர், ஏப். 24: விருதுநகர் மாவட்ட வேளாண் திட்ட அறிக்கை பல்வேறு அம்சங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது என்று ஆட்சியர் சிஜி தாமஸ் வைத்யன் கூறினார்.

கோவிலாங்குளம் அறிவியல் நிலையம் மூலம் 2010-11-ம் ஆண்டு6க்கான முன்னிலை செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல் உள்பட பல்வேறு அம்சங்கள் குறித்து வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட முன்னோடி விவசாயிகளும் கலந்து கொண்டு விவாதிக்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அவர் பேசியது:

மாவட்ட விவசாயிகள் பயனடையும் விதத்தில், நெல்லில் புதிய வீரிய ஒட்டு ரக நெல்லான கோ.ஆர்.எச். 3, வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய புதிய ரக நெல் அண்ணா-4 அறிமுகப்படுத்தப்படுகிறது.

கருவி மூலம் நேரடியாக நெல் விதைக்கும் செயல் விளக்கத் திடல்கள், உளுந்து பயிரில் புதிய ரகமான வமபன்-5 ரக பிரபலப்படுத்தப்படும். பாசிப்பயறு புதிய ரகமான வம்பன்- 3 ரகம், தட்டைப் பயறு வம்பன்-2 மற்றும் துவரை வகையில் வீரிய ஒட்டு ரகமான எஸ்.வி.பி.ஆர்-1. வேளாண் ரகமான எஸ்.வி.பி.ஆர். 4, புதிய ரகமான எஸ்.வி.பி.ஆர்-1 ஆகியவை குறித்து விவசாயிகளிடையே எடுத்துரைக்கப்படும்.

வேளாண் கருவிகள் முன்னிலை செயல் விளக்கத் திடல்களில் ஆழ்சால் அகலப்படுத்தி அமைத்து விதைக்கும் கருவி, டிராக்டர் மூலம் விதைப்பு, உரமிடும் கருவி மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் 25 துளைகள் கொண்ட விசைத் தெளிப்பான், வேளாண்மையை ஊக்குவிக்கும் விதத்தில் பாலி சில்பாலின் மண்புழு உரத்தொட்டி, கர்நாடகா மாநில வேளாண் பல்கலைக்கழகத்தின் வெளியீடான கே.பி.எஸ்.எச்-4 சூர்யகாந்தி மற்றும் இனப்பெருக்கம் செய்ய வல்ல கோ-5 சிறிய வெங்காயம், விதை வெங்காயத்தை சேகரித்து வைக்க பூனா வகை சேமிப்பு முறை அறிமுகம் ஆகியவை வேளாண் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

மிளகாய் பயிரில் காய்ப்புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்தவும், வெண்டைப் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படுத்த தொழில் நுட்பங்கள், வெங்காயத்தில் வேர் அழுகல் கட்டுப்பாடு, ஆடுகள், மாடுகளுக்கு நுண்ணூட்டக் கலவைக் கட்டி, புல்கரணை கட்டும் கருவியைப் பயன்படுத்துதல் உள்ளிட்டவை இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

இக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கணேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஜெயபாண்டியன், உதவியாளர் (பொது) கணேசன், சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் காசி விஸ்வநாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜ ராஜேஸ்வரி, வட்டாட்சியர்கள், விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்வு**

First Published : 26 Apr 2010 12:42:03 AM IST

Last Updated : 26 Apr 2010 10:14:31 AM IST

ஒட்டன்சத்திரம், ஏப். 25: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்ந்துள்ளது.

ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள அம்பிளிக்கை, கொசவபட்டி, தங்கச்சியம்மாபட்டி, காளாஞ்சிபட்டி, கேதையுறும்பு, மூலச்சத்திரம், விருப்பாச்சி, அரசப்பபிள்ளைபட்டி, காவேரியம்மாபட்டி, பெரியகோட்டை உள்பட பல கிராமங்களில் இருந்து இந்த மார்க்கெட்டுக்கு தினசரி தக்காளி விற்பனைக்கு வருகிறது. இவற்றை தமிழகம் மற்றும் கேரள வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர்.

தற்போது தக்காளியின் தேவை அதிகமாக இருப்பதால் மார்க்கெட்டிற்கு வரும் தக்காளியை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுக்கின்றனர். இதனால் தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டியின் விலை ரூ.150-க்கு விற்பனையானது.

அதே போல அவரைக்காய் விலையும் உயர்ந்து கிலோ ரூ.32-க்கு விற்பனையானது.

இது குறித்து வியாபாரி அரிகரசுதன் கூறியதாவது:

தற்போது மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து குறைந்துவிட்டது. தக்காளியின் தேவை அதிகமாக இருப்பதால், அதிக விலை கொடு0த்து வாங்கும் சூழ்நிலை உள்ளது.

இன்னும் சில நாள்களில் தக்காளி பெட்டியின் விலை ரூ.200 முதல் 250 வரை உயர வாய்ப்பு உள்ளது. அதே போல மற்ற காய்கறிகளின் விலைகளும் கடந்த வாரத்தை விட சற்று உயர்ந்துள்ளது என்றார்.

**ரூ.3.10 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்**

First Published : 26 Apr 2010 03:24:37 AM IST

கோபி, ஏப்.25: கோபியில் சனிக்கிழமை நடைபெற்ற வாழைத்தார் ஏல விற்பனை ரூ.3.10 லட்சத்துக்கு ஆனது.

÷கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் வாரத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வார ஏல விற்பனை விபரம்: கதளி கிலோ ரூ.13.20, நேந்திரன் கிலோ ரூ.15, தார் ஒன்றுக்கு பூவன்-ரூ.280, மொந்தன்-ரூ.125, செவ்வாழை-ரூ.305, தேன்வாழை-ரூ.220, ரோபாஸ்டா-ரூ.210, ரஸ்தாளி-ரூ.225, பச்சைநாடான்-ரூ.100க்கும் விற்பனையானது.

÷இந்த வாரம் ஏலத்திற்கு 5,500 தார்கள் வந்தது. ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.3 லட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

தேங்காய் ஏல விற்பனை: சனிக்கிழமை நடைபெற்ற தேங்காய் ஏல விற்பனைக்கு 5,500 தேங்காய்கள் விற்பனைக்கு வந்தது. குறைந்தபட்ச விலையாக ரூ.3 க்கும் அதிக பட்ச விலையாக ரூ.5.10 க்கும் விற்பனையானது. இதன் மதிப்பு ரூ.23,000 ஆகும்.

**இயற்கை சார்ந்த பொருள்களை உரங்களாகப் பயன்படுத்த வேண்டும்**

First Published : 26 Apr 2010 03:23:58 AM IST

கோபி, ஏப்.25: உரத் தேவைகளைக் குறைத்து இயற்கை சார்ந்த பொருள்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.

நாளுக்கு நாள் உரத்தேவை அதிகரித்து வருவதால் மண்வளம் பெருக பசுந்தாள் உரங்கள், தொழு உரம், உயிர் உரங்கள்

போன்ற இயற்கை இடுபொருள்களைப் பயன்படுத்த வேண்டும் என ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆ.கோபால் தெரிவித்தார்.

÷கோபி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வேளாண்மைத் துறையின் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில், அவர் பேசியது:

÷1947ல் 32 கோடியாக இருந்த மக்கள் தொகை இப்போது 120 கோடியாக அதிகரித்துள்ளது. அதற்கேற்ப 45 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 4 மடங்காக அதிகரித்து 2 கோடி டன்களாக உயர்ந்துள்ளது. நவீன வேளாண் தொழில் நுட்பத்தைப் புகுத்தியதால் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது. வேளாண் திட்டங்களை விவசாயிகள் ஏற்று சிறப்பாக கடைப்பிடித்ததால் பயிர் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது.

÷ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் உர விற்பனை விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வரப்பெறும் உர வகைகளுக்கு அவற்றின் சத்துக்களுக்கேற்ப விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படும்.

உரம், மருந்துக் கடைகள் லாப நோக்கில் மட்டுமல்ல, சேவை அடிப்படையிலும் நடத்தப்பட வேண்டும். பப்பாளி மாவுப்பூச்சி குறித்த விழிப்புணர்வு அனைத்து கடைகளிலும் பேனர்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்தக் கூடிய புரபனோபாஸ் போன்ற மருந்துகள் அனைத்து கடைகளிலும் இருப்பு வைக்க வேண்டும். மகளிர் குழுக்கள் விதைப் பண்ணைகள் அமைத்து வேளாண்துறைக்கு வழங்க வேண்டும் என்றார்.

÷கோபி வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு விவசாயிகளுக்கு தலா ரூ.45,000 மானியத்தில் பவர் டில்லர்கள், 12 பண்ணை மகளிர் குழுக்களுக்கு தலா ரூ.4930 மதிப்பில் மொத்தம் ரூ.60 ஆயிரத்தில் செம்மை நெல் சாகுபடிக்கு உதவும் களைக் கருவிகள், ஆத்மா உழவர் ஆர்வலர் குழுவுக்கு ரூ.10,000 ஊக்க நிதி ஆகிய நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது. மானிய விலையில் ரூ.5.32 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள் வழங்கப்பட்டது.

÷கோபி வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) அ.நே.ஆசைத்தம்பி வரவேற்றார். கோபி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி குமாரசாமி. ஈரோடு வேளாண்மை துணை இயக்குனர் மனோகரன், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் கந்தசாமி, பவானி வேளாண்மை உதவி இயக்குநர் பாபு, கோபி, டி.என்.பாளையம் வட்டாரத்தைச் சேர்ந்த உரம், மருந்து விற்பனையாளர்கள், பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

÷துணை வேளாண் அலுவலர் ஆர்.கலைச்செல்வன் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை கோபி வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 26 Apr 2010 03:34:12 AM IST

சேலம், ஏப். 25: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 71.68 அடியாக இருந்தது.

÷ அணைக்கு விநாடிக்கு 2,938 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 2,405 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 34.16 டி.எம்.சி.

**செம்மை நெல் சாகுபடிக்கான களையெடுக்கும் கருவி அறிமுகம்**

First Published : 26 Apr 2010 03:54:17 AM IST

கோவை, ஏப். 25: செம்மை நெல் சாகுபடிக்கான விசை களையெடுக்கும் கருவியை கோவை வேளாண் பல்கலை. விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். இக் கருவி விவசாயிகளின் பயன்பாட்டுக்கு விரைவில் வர உள்ளது.

÷பல்கலை.யில் விசை களையெடுக்கும் கருவியின் பயன்பாடு குறித்து துணைவேந்தர் ப.முருகேச பூபதி முன்னிலையில் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அவர் பேசியது:

÷விவசாய வேலையாள்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. இப் பிரச்னையை சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகளை வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அறிமுகம் செய்து வருகின்றனர்.

÷செம்மை நெல் சாகுபடியில் விளைச்சலைப் பெருக்க களையெடுக்கும் பணி முக்கியமானது. இதனால், செம்மை நெல் சாகுபடிக்கான விசை களையெடுக்கும் கருவியை வேளாண் விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். அனைத்து வகையான சேற்று வயல்களிலும் மூழ்காமல் களையெடுக்கும் வகையில் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது, என்றார்.

÷வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் சிவ.சந்தானபோசு பேசுகையில், "இக் கருவி ஒரே சமயத்தில் இரு வரிசையில் களையெடுக்கும். 1.5 குதிரைத் திறன் கொண்ட பெட்ரோல் என்ஜினில் இயங்குகிறது. கருவியின் எடை 17 கிலோ. இதன் மூலம் ஒரு நாளில் 0.8 ஹெக்டேர் பரப்பளவில் களையெடுக்கலாம். விலை ரூ.30 ஆயிரம்' என்றார்.

**செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் அதிக மகசூல்**

First Published : 26 Apr 2010 12:57:35 AM IST

தேனி, ஏப். 25: தேனி மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி திட்ட வயல்களில் அதிக மகசூல் கிடைத்துள்ளதாக மாவட்ட விவசாய இணை இயக்குநர் நடராஜன் கூறினார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மாவட்டத்தில் இந்தாண்டு 11 ஆயிரத்து 478 ஹெக்டேராக சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு போதிய மழையின்றி ஆற்றில் நீர் வரத்துக் குறைவாக இருந்தபோதும், செம்மை நெல் சாகுபடித் திட்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெற்றுள்ளனர். பல்வேறு இடங்களில் அறுவடை பரிசோதனை திடல் அமைத்து, செம்மை நெல் சாகுபடித் திட்ட வயல்களில் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் ஹெக்டேருக்கு அதிகபட்சம் 7,640 கிலோவும், சராசரியாக 7,287 கிலோவும் மகசூல் கிடைத்துள்ளது தெரிய வந்துள்ளது என்றார் நடராஜன்.

தினமலர்

**தேயிலை எஸ்டேட் பகுதியில் மரங்களை வெட்டுவதற்கு தடை : இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தல்**

வால்பாறை : வால்பாறையில் இயற்கை எழிலுக்கு ஆபத்தை விளைவிக்கும் எஸ்டேட் பகுதியில் மரங்கள் வெட்ட அரசு தடை விதிக்க வேண்டும்.

ஆனைமலை புலிகள் காப்பகம் 958 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில், வால்பாறை, மானாம்பள்ளி உட்பட ஆறு வனச்சரகங்கள் உள்ளன. மொத்த நிலப்பரப்பில் 50 சதவீதம் தோட்டப்பயிர்களும், 50 சதவீதம் வனப்பகுதியாகவும் உள்ளன.

வால்பாறையில் ஆண்டுதோறும் பெய்துவரும் மழையை வைத்து பரம்பிக்குளம் பாசனத்திட்டத்தின் கீழ் சோலையாறு, மேல்நீராறு, கீழ்நீராறு, அப்பர்ஆழியாறு மற்றும் காடம்பாறை அணைகள் கட்டப்பட்டுள்ளன. காடம்பாறை நீரேற்று மின் திட்டத்திலிருந்து 400 மெகாவாட் மின்சாரமும், சோலையாறு அணை மூலம் 70 மெகாவாட் மின்சாரமும் நாள் தோறும் தயாரிக்கப்படுகிறது. வனவளம் நிறைந்த வால்பாறையில் சமீப காலமாக எஸ்டேட் பகுதிகளில் விதிமுறைகளை மீறி மரங்கள் வெட்டி கடத்தப்படுகின்றன.

இதனால், வால்பாறையில் ஆண்டு தோறும் மழை வளம் குறைந்துவருவதோடு, வனப்பகுதியில் மேலும் மழைப்பொழிவு குறைந்து சமவெளிப்பகுதியை போல் சீதோஷ்ணநிலை மாறிவருகிறது. வால்பாறையில் இயற்கை எழிலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் மரங்கள் தொடர்ந்து வெட்டப்படுவதால் சோலைவனம், பாலைவனமாக மாறிவருகிறது. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் வாழும் வனவிலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் போதிய பாதுகாப்பு இல்லாத நிலையில் வால்பாறையில் இயற்கை வளம் அழிந்துவருகிறது. உலகம் வெப்பமயமாதலை தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், வால்பாறை போன்ற இயற்கை வளம் நிறைந்த பகுதியில் மரங்களை வெட்ட அரசு அனுமதி வழங்குவதை தவிர்க்க வேண்டும் என்பது இயற்கை ஆர்வலர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

**மாங்காய் விளைச்சல் வீழ்ச்சி பொள்ளாச்சிக்கு வரத்து குறைவு**

பொள்ளாச் : பொள்ளாச்சியில் மாங்காய் சீசன் துவங்கியுள்ள நிலையில், இந்தாண்டில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் மாங்காய் வரத்தும் குறைந்துள்ளது.
பொள்ளாச்சிக்கு கம்பம், தேனி, செங்கோட்டை உள்ளிட்ட வெளிப்பகுதிகளில் இருந்தும், ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர் உட்பட சுற்றியுள்ள கிராமப்பகுதியில் இருந்தும் மாங்காய் வரத்து உள்ளது. பருவநிலை சரியில்லாததால் இந்தாண்டில் மாங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. எனவே, மாங்காய் சீசன் துவங்கியுள்ள நிலையில், பொள்ளாச்சிக்கு குறைந்தளவில் மட்டுமே மாங்காய் வரத்து உள்ளது.
வியாபாரிகள் கூறியதாவது: கடந்த சில மாதங்களுக்கு முன் பலத்த மழை பெய்ததால் மாமரங்களில் முதல்கட்ட பூக்கள் அனைத்தும் உதிர்ந்துவிட்டன. தொடர்ந்து வந்த நாட்களில் வெயில் காரணமாக பூக்கள் கருகின. மழை, வெயில் என மாறி மாறி பருவநிலை ஏமாற்றியதால், இந்தாண்டில் மாங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. தற்போது மாங்காய் சீசன் துவங்கியிருந்தாலும், விளைச்சல் குறைந்துள்ளதால், சந்தைக்கும் வரத்து குறைந்துள்ளது; எனவே விற்பனை விலை அதிகரித்துள்ளது.
தற்போது செந்தூரம் உள்ளிட்ட பல ரகங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. செந்தூரம் கிலோ 20 முதல் 25 ரூபாய்க்கும், 'கிளிமூக்கு' மாங்காய் கிலோ 15 முதல் 20 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. வரும் நாட்களில் விலை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. விளைச்சல் குறைந்திருப்பதால், கேரளாவுக்கு இந்தாண்டில் இங்கிருந்து மாங்காய் அனுப்புவது தடைபட்டுள்ளது. இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**செயற்கை கருவூட்டல் கட்டணம் குறைப்பு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கால் நடைகளுக்கு செயற்கை கருவூட்டலுக்கு கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. கலெக்டர் அமுதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தர்மபுரி மாவட்டத்தில் 3 லட்சத்து 2 ஆயிரத்து 798 மாடுகளும், 78,758 எருமைகளும் உள்ளன. கால்நடை பராமரிப்பு துறையின் கால்நடை பிரதம மருத்துவமனைகள் இரண்டு, கால்நடை மருத்துவமனைகள் உள்ளன.

மேலும் 31 கால்நடை மருந்தகங்கள், இரு நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 12 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள், 14 கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள், 19 கால்நடை மருத்துவ பட்டதாரிகள், ஐந்து ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளர்கள், 24 தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு அபிவிருத்தி முகமை மூலம் பயிற்சி பெற்ற கிராம புற இளைஞர்கள் மூலமாக செயற்கை முறை கருவூட்டல் பணிகள் நடந்து வருகிறது. செயற்கை முறை கருவூட்டலுக்கு கட்டணமாக 15 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்ட கிராமப்பகுதி மக்கள் அதிக அளவில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு தங்களது அன்றாட வருமானத்தில் குறிப்பாக பசு, எருமைகளை நம்பியுள்ளனர். செயற்கை முறை கருவூட்டல் மூலம் தரமான உயரின கலப்பின பசுக்களை, கலப்பின் எருமைகளை உற்பத்தி செய்து

பால் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் கால்நடை வளர்போர் அதிக வருமானத்தை பெற முடியும். செயற்கை முறை கருவூட்டல் செய்து கொண்டு பயன்பெறும் வகையில் வரும் மே முதல் தேதியில் இருந்து செயற்கை முறை கருவூட்டலுக்கு கட்டணம் 15 ரூபாயில் இருந்து 10 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் கால்நடை நிலையங்களில் 10 ரூபாய் கட்டணம் செலுத்தி செயற்கை முறை கருவூட்டல் செய்து நல்ல வருவாய் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ரேஷன் பருப்பு வாங்க தயக்கம் வெளிமார்க்கெட்டில் விற்பனை ஜோர்**

திண்டுக்கல் : வெளி மார்க்கெட்டில் பருப்பு விலை குறைந்ததால், மக்கள் ரேஷனில் பருப்பு வாங்க ஆர்வம் காட்டவில்லை.
கடந்த சில மாதங்களுக்கு முன்பு வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ துவரம் பருப்பு விலை 80 ரூபாய்க்கு விற்றது. ரேஷனில் ஒரு கிலோ பருப்பு 40 ரூபாய்க்கு விற்றதால் மக்கள் ரேஷனில் பருப்பு வாங்க ஆர்வம் காட்டினர். போதிய சப்ளை இல்லாத நிலையில் பல இடங்களில் பிரச்னை ஏற்பட்டது.இந்நிலையில் வெளிமார்க்கெட்டில் பருப்பு விலை கிலோ 65 யாக குறைந்தது. இதனால் ரேஷன் பருப்புக்கு மவுசு குறைந்துள்ளது.பருப்பு வாங்குவதற்கும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை.ரேஷன் பருப்பை வாங்க மக்கள் ஆர்வம் காட்டாததால் இந்த பருப்பு வெளி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வந்துள்ளது.

**பழங்கள் விலை உயர்வு**

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் பழங்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன், ஒரு கிலோ வாஷி ங்டன் ஆப்பிள் 90 ரூபாயாக இருந்தது.
நேற்று 140 ரூபாயாக அதிகரித்திருந்தது. 80 ரூபாயாக இருந்த சைனா, ஐஸ்கிரீம் ரகங்கள் 120 ரூபாயாக உயர்ந்துள்ளன. ரூ.70க்கு விற்ற வெள்ளை மாதுளை 130 ரூபாயாகவும்,100 ரூபாய்க்கு விற்ற காபூல் மாதுளை 180 ஆகவும் அதிகரித்துள்ளன. ஆரஞ்சு 60, சாத்துக்குடி 25, மாம்பழத்தில் இமாம்பசந்த் 100, சப்பட்டை 70, செந்தூரம் 60 ஆகிய விலைகளில் விற்கப்படுகின்றன.

**தேயிலை முன்பணம் குறைவு அங்கத்தினர்கள் அதிருப்தி**

மஞ்சூர் : மஞ்சூர் பகுதி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில், பசுந்தேயிலைக்கான முன் பணம் குறைந்ததால், அங்கத்தினர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.
மஞ்சூர் பகுதியில் மஞ்சூர், கிண்ணக்கொரை, பிக்கட்டி, எடக்காடு, மேற்குநாடு, இத்தலார், மகாலிங்கம், கைகாட்டி உட்பட பகுதிகளில், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன; 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கத்தினர்களாக உள்ளனர். தங்கள் தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை, அந்தந்த தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர். கடந்த ஏப்ரல் 2வது வாரம் வரை வினியோகித்த பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு, அந்தந்த கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் விலை நிர்ணயம் அடிப்படையில் 8 முதல் 10 ரூபாய் வரை முன்பணம் வழங்கப்பட்டு வந்தது. தேயிலைத் தோட்டங்களுக்கு வேலைக்கு வரும் ஆட்களுக்கு கூலி மற்றும் தோட்ட பராமரிப்புகளுக்கு, இத்தொகை ஓரளவு ஆறுதலாக இருந்து வந்தது.
கடந்த இரு மாதங்களாக, தேயிலைக்கு போதிய கிராக்கி இல்லாததால், தேயிலைத் தூள் விற்பனையில் மந்தம் ஏற்பட்டு தூள் தேங்கின. குன்னூர் இன்ட்கோ சர்வ் அலுவலகத்தில், கடந்த இரு வாரங்களுக்கு முன் நடந்த தேயிலை விலை நிர்ணயத்தில், கடந்த மாதத்தை விட கிலோவுக்கு 3 ரூபாய் வரை விலை குறைந்தது. தொடர்ந்து, தேயிலைக்கான விலையில் முன்னேற்றம் தென்படவில்லை; இதனால், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தனி அலுவலர்கள்,

பசுந்தேயிலைக்கான முன்பணத்தை குறைக்க திட்டமிட்டனர்.
தற்போது, கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தேயிலைத் தூளின் விற்பனையை பொருத்து 2 ரூபாய் வரை முன்பணத்தை குறைத்துள்ளனர். கடந்த மாதம் வரை பசுந்தேயிலைக்கான முன்பணம், அந்தந்த கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் அடிப்படையில், கிலோவுக்கு 7 முதல் 9 ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்தது. தற்போது, 5 முதல் 8 ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது. தேயிலைத் தூளின் விற்பனையை பெருக்க, இன்ட்கோ சர்வ் நிர்வாகம் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, பசுந்தேயிலைக்கான விலையில் முன்னேற்றம் காணலாம் என அங்கத்தினர்கள் தெரிவிக்கின்றனர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை**

ராமநாதபுரம் : கூடுதல் விலைக்கு சில்லறை விற்பனை நடந்தால், புகார் தெரிவிக்க வலியுறுத்தப் பட்டுள்ளது.
சத்துகள் அடிப்படையில் உரமானியம் வழங்கும் திட்டம் கடந்த ஏப்.,ஒன்று முதல் அமலில் உள்ளது. இதன் படி யூரியா உரத்துக்கு மட்டுமே, அதிகபட்ச சில்லரை விற்பனை விலை நடைமுறையில் இருக்கும். யூரியா அல்லாத இதர உரங்களுக்கு, அந்தந்த உர நிறுவனங்களே சில்லரை விற்பனை விலையினை நிர்ணயம் செய்வார்கள் . இதனால் சில்லரை விற்பனை விலையில் நிறுவனங்களுக்கிடையே வித்யாசம் இருக்கும்.  உர மூடையில் குறிப்பிடப்பட்டுள்ள , விலைக்கு மேல் சில்லரை விற்பனை செய்யக்கூடாது. இதை மீறுபவர்கள்,மீது  நடவடிக்கை எடுக்கப்படும்.  உர விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் ,  வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.
 வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி கூறியதாவது:  ஏப்.ஒன்று முதல் குறிப்பிடப்பட்டுள்ள சில்லரை விற்பனை விலைக்கு மேல், உரங்கள் விற்பனை செய்யக்கூடாது. மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த மார்ச் 31க்கு முன் கொள்முதல் செய்யப்பட்ட உரங்களை, பழைய அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கே வினியோகம் செய்யலாம். இந்நடைமுறை குறித்து தீடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும், என்றார்.

**இயற்கை உரம் தயாரிப்பது பற்றி ஒருநாள் பயிற்சி முகாம் : திருவையாறில் செயல்விளக்கம்**

திருவையாறு: வாழைமட்டையில் இருந்து நார் பிரித்தெடுப்பது, வாழைக் கழிவுகளில் இருந்து இயற்கை உரம் தயாரிப்பது பற்றி ஒருநாள் பயிற்சி முகாம் திருவையாறில் நடந்தது.
திருவையாறு எம்.எஸ்.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை வாழைநார் ஆராய்ச்சி மையம் இணைந்து பயிற்சியை நடத்தின.
திருவையாறு சகாயமாதா வாழை ஏல மையம், மணலூர் கிராமத்தில், விவசாயிகள் மற்றும் சுய உதவிக்குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
வாழைமட்டையில் இருந்து நார் பிரித்தெடுக்கும் இயந்திர செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. இந்த இயந்திரத்தின் வாயிலாக வாழைமட்டைகளை தார் வெட்டி எடுத்த பிறகு 15 நாட்கள் கழித்து நார் வெட்டி எடுத்து, அதன் பிறகு 15 நாட்கள் கழித்து தரமான நார் பிரித்தெடுக்கலாம். அந்த நாளில் இருந்து பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட உபயோகப் பொருட்கள் தயாரிக்கலாம். நார் எடுத்த பிறகு உண்டான கழிவுகளை மதிப்பு கூட்டப்பட்ட இயற்கை உரமாக தயாரிக்கலாம் என செயல் விளக்கம் செய்து காட்டினர்.

இது குறித்து சென்னை ஆராய்ச்சி மைய அதிகாரிகள் சுப்பிரமணியம் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் கூறியதாவது:வாழைமட்டையில் இருந்து கையினால் நார் உருவி எடுக்கும்போது ஒரு நாளைக்கு அதிகபட்சம் அரை கிலோ மட்டுமே எடுக்க முடியும். ஆனால் இந்த இயந்திரத்தின் வாயிலாக 8 மணி நேரத்தில் 20 கிலோ நார் உற்பத்தி

செய்ய முடியும். எந்த ஒரு விவசாயியும் இதை எளிதாக வயல்களிலேயே இயக்கலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட நார்களை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாழைநார் ஆராய்ச்சி மையமே எடுத்துக் கொள்கிறது.வாழைநாருக்கு வெளிநாடுகளில் அதிக தேவை உள்ளதால் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏற்றுமதியும் செய்யலாம். நார் எடுத்த பிறகு உண்டான கழிவுகளில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட இயற்கை உரம் தயாரிக்கலாம். இதனால் மண் வளம் கூடும். மகசூல் பெருகும். சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். ஒரு ஏக்கரில் 300 கிலோ வரை நார் எடுக்கலாம். கிலோவுக்கு ரூபாய் 40 வரை கிடைக்கும். மேலும் ஒரு ஏக்கரில் இருந்து 2 முதல் இரண்டரை டன் வரை மதிப்பு கூட்டப்பட்ட இயற்கை உரம் கிடைக்கும். இதன் வாயிலாக ரூபாய் 20 ஆயிரம் கூடுதல் வருமானம் கிடைக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்த னர்.சென்னை எம்.எஸ்.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முன்னிலை விஞ்ஞானி ஸ்ரீநாத், ஆலோசகர் பழனியப்பன் ஆகியோர் விளக்கமளித்தனர்.திருவையாறு கார்ப்பரேசன் வங்கி மேலாளர் சீனிவாசன் விவசாயிகளுக்கான கடனுதவி பற்றி கூறினார். நிலைய பொறுப்பாளர் முத்துக்குமார் வரவேற்றார். தொழில் நுட்ப அலுவலர் முருகன் நன்றி கூறினார்.

**கோவங்காய் விலை வீழ்ச்சி கூடலூர் விவசாயிகள் கவலை**

கூடலூர் : கோவங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
குள்ளப்பகவுண்டன் பட்டி, சுருளிப்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, கூடலூர் ஆகிய பகுதிகளில் கோவங்காய் அதிக அளவில் பயிரிடப்பட்டுள் ளது. திராட்சை விவசாயம் செய்த விவசாயிகள் பலர் மாற்று விவசாயமாக கோவாங்காயை பயிரிடப் பட்டிருந்தனர். கோவங் காய் மருத்துவகுணம் நிறைந்த காயாக இருப்பதால் கேரளா மக்கள் அதிக அளவில் கொள்முதல் செய்தனர்.
இதனால் கடந்த ஆண்டு கிலோவிற்கு 30 ரூபாய் வரை விலை இருந்தது. விலை அதிகரித்ததால் மேலும் அதிகமான விவசாயிகள் கோவங் காயை பயிரிட்டனர். இதன்காரணமாக வரத்து அதிகமாக இருந்தது. தற்போது கூடுதல் வரத்து காரணமாக திடீரென விலை குறைந்து கிலோவிற்கு மூன்று ரூபாயாக உள்ளது.
இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கோவங்காயை தமிழகத்தில் அதிகமாக பயன்படுத்துவதில்லை. அருகில் உள்ள கேரளாவில் இக் காயை அதிகமாக பயன்படுத்துவதால் இப்பகுதியில் உற்பத்தியாகும் கோவங் காய் முழுவதும் கேரளாவிற்கு அனுப்படுகிறது.

**மீன் வளர்க்கும் உரிமை விவசாயிகள் கோரிக்கை**

கூடலூர் : கூடலூர் ஒட்டான் குளம் கண்மாயில் மீன் வளர்க்கும் உரிமையை நீரினை பயன்படுத்துவோர் சங்கத்திற்கு வழங்க கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.
கூடலூர் ஒட்டான் குளம் கண்மாயில் மீன் வளர்க்கும் உரிமை தனி நபர்களுக்கு டெண்டர் விடபட்டு வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு பயன் இல்லாமல் போகிறது. இக்கண்மாய்க்கு வரும் நீர்வரத்து வாய்க்கால் பராமரிப்பு பணிகள் முழுவதையும் நீரினை பயன்படுத்துவோர் சங்கம் செய்து வருகிறது. இதற்காக கண்மாயில் மீன் வளர்க்கும் உரிமையை இச்சங்கத்திற்கு வழங்க பொதுப்பணித்துறையினர் முன்வரவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இயற்கை விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை சட்டசபையில் எம்எல்ஏ வலியுறுத்தல்**

தொட்டியம்: விவசாயத்தை மேம்படுத்த ஒன்றியத்திற்கு 10 கோனாவீடர் கருவியை வழங்கவேண்டும். இயற்கை விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டசபையில் தொட்டியம் எம்எல்ஏ ராஜசேகரன்

பேசினார்.தமிழக அரசின் சட்டசபை கூட்டம் தற்போது நடந்து வருகிறது. இதில் விவசாயத்துறை மானிய கோரிக்கையில் தொட்டியம் எம்எல்ஏ ராஜசேகரன் பேசியதாவது.

தமிழக அரசு இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்காக 50 சதவீதம் தொகையை பிரீமியமாக செலுத்துகிறது. தற்போது விவசாயம் நலிந்த நிலையில் உள்ளது. அதனால் தான் அரசு கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்து வட்டியே இல்லாத கடனையும் வழங்குகிறது. நெல் சாகுபடிக்கு கோனாவீடர் என்ற களை எடுக்கும் கருவிக்கு ரூ. 1400 அரசு மானியமாக வழங்குகிறது. ஒரு யூனியனுக்கு 100 கருவிகள் வழங்கப்படுகிறது. இப்போது வந்திருக்கும் பவர் வீடர் என்ற களை எடுக்கும் இயந்திரம் வெளிச்சந்தையில் 35 ஆயிரம் ரூபாய்க்கு கிடைக்கிறது. அதை ரூ. 10 ஆயிரம் மானியத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 10 வீதம் கொடுத்தால் விவசாயம் செழிக்கும். இயற்கை விவசாயத்தை பயன்படுத்தும் போது நோய்கள் குறைகிறது.
எனவே இயற்கை விவசாயத்தை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கொளக்குடி கிராமத்தில் 20 வருடங்களாக கூட்டுகுடிநீர் திட்டத்தில் பழைய குழாய்களை அகற்றிவிட்டு புதிய குழாய் மாற்றித்தர வேண்டும். தொட்டியம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 5 ஏக்கர் நிலமும், 18 வகுப்பறைகளும் காலியாக இருக்கின்றன. இங்கு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்கவேண்டும், பாப்பாப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற வேண்டும்.
சூப்பர்பாஸ்பேட் உரம் தற்போது பவுடராக கிடைக்கிறது. அதை பொட்டாஷ்ப்டனோ, யூரியாவுடனோ கலக்கும்போது உடனே தண்ணீராகிவிடுகிறது. எனவே குருணை வடிவில் தரவேண்டும். இவ்வாறு எம்எல்ஏ ராஜசேகரன் பேசினார். இத்தகவல் எம்எல்ஏ அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் செம்மை நெல் சாகுபடியில் களை எடுக்கும் கருவி செயல் விளக்கம்

*கோவை, ஏப்.26–*
*செம்மை நெல் சாகுபடிக்கு பயன்படும் விசை களைஎடுக்கும் கருவியின் செயல்விளக்க நிகழ்ச்சி கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நடந்தது.*
*செயல்விளக்கம்*



வேளாண் பல்கலைக்கழக வயல்வெளியில் நடந்த களை எடுக்கும் கருவி குறித்த செயல் விளக்கத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி பார்வையிட்டபோது எடுத்தபடம்.

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு செம்மை நெல் சாகுபடிக்கு பயன்படும் விசை களைஎடுக்கும் கருவியின் பயன்பாடு குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி பல்கலைக்கழகத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி வயலில் நடந்தது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி செயல் விளக்கத்தை பார்வையிட்டு விசை களைஎடுக்கும் கருவி குறித்து விஞ்ஞானிகளுக்கு விளக்கி கூறினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*களைஎடுக்கும் கருவி*

*நெல் சாகுபடியில் பண்ணை கருவிகளின் பங்கு மிக முக்கியமானதாகும். குறிப்பாக டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உற்பத்தி செலவை குறைத்து வேலையாள் பற்றாக்குறையை போக்க இந்த கருவி பயன்படும். தமிழ்நாட்டில் தற்போது அதிகமாக பயிரிடப்பட்டு வரும் செம்மை நெல் சாகுபடியின் விளைச்சலை பெருக்குவதில் களை எடுக்கும் கருவியின் பணி மிகவும் முக்கியமானதாகும்.*

*தற்போது கையால் இயங்கும் கோனோ வீடர் கருவியை கொண்டு விவசாயிகள் களை எடுத்து வருகின்றனர். இதன் மூலம் களை எடுப்பது சிரமமாக உள்ளதாகவும், கருவியை இயக்குவதற்கு தேவையான ஆட்கள் கிடைப்பது அரிதாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் விசை களையெடுக்கும் கருவியை வேளாண் பல்கலைக்கழகம் வடிவமைத்து உள்ளது.*

*இரண்டு வரிசை*

*இந்தியாவிலேயே முதல் முறையாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கருவி மூலம் அனைத்து வகை சேற்று வயல்களிலும் மூழ்காமல் இயங்கும் வகையிலும், வரிசை இடைவேளைக்கு ஏற்ப 20 சென்டிமீட்டர் முதல் 30 சென்டிமீட்டர் வரை மாற்றி களை எடுக்க கூடிய வகையிலும் இந்த கருவி வடிவமைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் ஒரே சமயத்தில் 2 வரிசைகளில் களையெடுக்க முடியும்.*

1.5 குதிரைதிறன் கொண்ட பெட்ரோல் மூலம் இயங்கும் இந்த கருவியின் எடை 17 கிலோ ஆகும். ஒரு நாளில் .8 ஹெக்டேர் வரை களை எடுக்கலாம். இதன் மூலம் ஏக்கருக்கு ரூ.ஆயிரத்து 500 வரை சேமிக்க முடியும். மேலும் களைஎடுக்கும் பணியை குறிப்பிட்ட காலத்துக்குள் 3 வேலை ஆட்களை கொண்டு சுலபமாக முடிக்க இயலும். இவ்வாறு முருகேசபூபதி கூறினார்.

## கொச்சியில் பிரமாண்ட மாம்பழ கண்காட்சி கலெக்டர் பீனா தொடங்கி வைத்தார்

பெரும்பாவூர்,ஏப்.26–
கொச்சியில் பிரமாண்ட மாம்பழ கண்காட்சியை கலெக்டர் பீனா தொடங்கி வைத்தார்.
மாம்பழ கண்காட்சி
எர்ணாகுளம் மாவட்டம், கொச்சி மரைவ் டிரைவ் ஹெலிபேடு மைதானத்தில் மாம்பழ கண்காட்சி தொடங்கியது. எர்ணாகுளம் மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலைத்துறை சார்பில் இந்த கண்காட்சி நடத்தப்பட்டது.
கண்காட்சியை மாவட்ட கலெக்டர் பீனா தொடங்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக எர்ணாகுளம் சரக ஐ.ஜி. சந்தியா கலந்து கொண்டார். இந்த மாம்பழ கண்காட்சி அடுத்த மாதம் 8–ந்தேதி வரை நடைபெறுகிறது.
135 வகையான மாம்பழங்கள்
மாம்பழ கண்காட்சியில் 135 வகைகள் கொண்ட மாம்பழங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. இதில் தமிழ்நாட்டில் இருந்து 60 வகைகளும், சேலம், நாமக்கல் வகை மாம்பழங்களும் இடம் பெற்று உள்ளன. கண்காட்சிக்கு ஏராளமானோர் வந்திருந்தனர்.
கண்காட்சியில் மல்கோவா, கங்கனப்பள்ளி, கிளிமூக்கு, நீலம், மல்லிகா உள்ளிட்ட மாம்பழ வகைகளும் இடம் பெற்று இருந்தன. கண்காட்சிக்கு வந்திருந்தவர்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்த மாம்பழங்களை ஆர்வத்துடன் வாங்கி ருசி பார்த்தனர். ஒரு கிலோ மாம்பழம் 30 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்கப்பட்டது.
வாழைப்பழ கண்காட்சி
கண்காட்சியை பார்க்க பெரியவர்களுக்கு 15 ரூபாய் நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டது. 12 வயது கீழ் உள்ள சிறுவர், சிறுமிகளுக்கு கண்காட்சியை பார்க்க இலவச அனுமதி வழங்கப்பட்டது. கண்காட்சியில் மாம்பழ செடிகள் விற்கப்பட்டது. இதே மைதானத்தில் வருகிற 29–ந்தேதி முதல் மே 2–ந்தேதி வரை பிரமாண்ட வாழைப்பழ கண்காட்சி நடக்கிறது. இந்த கண்காட்சியை திருச்சி எம்..எம்.முஸ்தபா தொடங்கி வைக்கிறார்.

## சென்ற 2009–10–ஆம் ஆண்டு ரபி பருவத்தில் நெல் பயிரிடும் பரப்பளவு 7 சதவீதம் சரிவடைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
சென்ற 2009–10–ஆம் ஆண்டு ரபி பருவத்தில் நெல் பயிரிடும் பரப்பளவு 7 சதவீதம் சரிவடைந்தது. முந்தைய 2008–09–ஆம் ஆண்டு ரபி பருவத்தில் நம் நாட்டில் 47.69 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது, சென்ற பருவத்தில் 44.42 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. நெல் பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு அதிக ஊக்கம் அளிக்காததே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.
கரீப்–ரபி
நம் நாட்டில் கரீஃப் மற்றும் ரபி ஆகிய இரண்டு பருவங்களில் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கரீஃப் பருவம் ஜூன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் நிறைவடைகிறது. ரபி பருவம் உத்தேசமாக அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடைகிறது.
கரீஃப் பருவத்தில் வேளாண் நடவடிக்கைகள் தென்மேற்கு பருவமழையைச் சார்ந்தும், ரபி பருவத்தில் சாகுபடி பணிகள் வடகிழக்கு பருவமழையைச் சார்ந்தும் நடைபெறுகின்றன. கரீஃப் பருவ பயிர்கள் கோடை கால பயிர்கள் என்றும் ரபி பருவ பயிர்கள் குளிர்கால பயிர்கள் என்றும் அழைக்கப்படுவதுண்டு.
சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில், பருவமழை பொய்த்ததால், உணவு தானியங்கள் உற்பத்தி கணிசமாக குறைந்தது. இப்பருவத்தில் வேளாண் உற்பத்தி 11 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிகிறது. இதனை ரபி பருவ மகசூல் ஈடு செய்யும் என்ற நிலை உள்ளபோதும், நெல் சாகுபடி பரப்பளவு உயர்ந்திருந்தால் உற்பத்தி மேலும் அதிகரித்திருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

அண்மையில் நிறைவடைந்த ரபி பருவத்தில் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்ததற்கு, ஆந்திரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பெரிய சரிவு ஏற்பட்டதே முக்கிய காரணமாகும். ரபி பருவ நெல் உற்பத்தியின் பங்களிப்பு (1.20 கோடி டன்), மொத்த ஆண்டு உற்பத்தியில் (9.20 கோடி டன்) 13 சதவீதமாக உள்ளது.

பருப்பு வகைகள்

ரபி பருவ நெல் சாகுபடி பரப்பளவு, குறைந்துள்ளபோதிலும், பருப்பு வகைகள் மற்றும் கோதுமை சாகுபடி பரப்பளவு கணிசமாக உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் சாகுபடி பரப்பளவு சுமார் 10 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது. கோதுமை பயிரிடும் பரப்பளவு 2.87 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, முந்தைய ஆண்டு ரபி பருவத்தில் 2.79 கோடி ஹெக்டேராக இருந்தது.

அதே சமயம் எண்ணெய் வித்துக்கள் மற்றும் புஞ்சை பயிர்கள் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 97.40 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டு பருவத்தில் 1.01 கோடி ஹெக்டேராக இருந்தது. புஞ்சை பயிர்கள் சாகுபடி பரப்பளவு 69 லட்சம் ஹெக்டேரிலிருந்து 65.20 லட்சம் ஹெக்ரோக குறைந்துள்ளது.

## கூடலூர் ஜீன்பூல் மையத்தில் 2 ஆயிரம் அரிய வகை மரக்கன்றுகள் நடும் பணி தீவிரம்

கூடலூர், ஏப்.26–

கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் 2 ஆயிரம் அரிய வகை மரக்கன்றுகள் நடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சேதம் அடைந்த வனங்கள்

கூடலூர் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவில் பரவலாக மழை பெய்து வருவதால் காய்ந்து கிடந்த வனப்பகுதிகளில் பச்சை பசேல் என புற்கள் செழித்து வளர்ந்து வருகின்றன. கடும் வறட்சியால் காட்டு தீ பிடித்து சேதம் அடைந்த வனங்கள் தற்போது பச்சை போர்வை போர்த்தியது போல் காட்சி அளிக்கின்றன. கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மைய வனப்பகுதியும் கடந்த மாதம் பிடித்த காட்டு தீயில் சேதம் அடைந்தது.

தற்போது இந்த மைய வனப் பகுதியில் பல இன மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டு வருகின்ற நிலையில், வருகிற மழை காலங்களில் வளரக்கூடிய வகையில் அரிய வகை மரக்கன்றுகள் நடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. அயனி பலா, வெண் தேக்கு என 2 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

நடும் பணி தீவிரம்

இதற்காக வனப்பகுதியில் பள்ளங்கள் தோண்டும் பணியில் கூலி தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஜீன்பூல் மைய வனப்பகுதியில் மரங்கள் அதிகளவு வளர்ந்தால் அப்பகுதியில் உள்ள காட்டு யானைகளுக்கு உணவு பஞ்சம் ஏற்படாது என வனத் துறையினர் தெரிவித்தனர். மேலும் இயற்கை சூழலையும் பேணி பாதுகாக்க முடியும் என கருதுகின்றனர்.

தற்போது கோடை காலமாக இருப்பதால் மரக்கன்று வைத்து நீர் பாய்ச்சப்படும். வருகிற மாதங்கள் மழை காலமாக விளங்குவதால் வனப்பகுதியில் வைத்துள்ள

*மரக்கன்றுகள் நன்கு செழித்து வளரும். இதுதவிர ஜீன்பூல் மையத்தில் அரிய வகை மரமான ஓமம் மரங்கள் நடுவ தற்கும் பரிசீலனை செய்யப் பட்டு வருவதாக வனத்துறை யினர் தெரிவித்துள்ளனர்.*

## ***கூடலூரில், அடிக்கடி பெய்யும் சாரல் மழையால் பஜ்ஜி மிளகாய் அழுகும் அவலம் விவசாயிகள் கவலை***



கூடலூரில் அவ்வப்போது இரவு நேரங்களில் சாரல் மழை பெய்து வருவதால் செடிகளில் உள்ள பஜ்ஜி மிளகாய்கள் அழுக தொடங்கி உள்ளதை படத்தில் காணலாம்.

*கூடலூர், ஏப்.26–*
*கூடலூரில் அடிக்கடி பெய்யும் சாரல் மழை யால் பஜ்ஜி மிளகாய்கள் அழுகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*

*கோடை வெயிலால் வறட்சி*

*கூடலூர் பகுதியில் கடந்த சில வாரங்களாக கோடை வெயில் வாட்டி எடுத்து வந்தது. இதனால் வெப்பம் தாங்காமல் முடியாமல் பொதுமக்கள் கடும் சிரமம் அடைந்தனர். மேலும் வெயில் தாக்கம் அதிகரித்து காணப் பட்டதால் தேயிலை மகசூல் குறைந்தது. இதுமட்டு மில்லாமல் காய்கறி விவசாயி கள் வெயில் காலங்களில் வளரக்கூடிய பாகற்காய், மிளகாய், கத்தரிக்காய், முட்டைக்கோஸ் உள்ளிட்ட காய்கறிகளை பயிரிட்டனர்.*

*இந்த நிலையில் கூடலூர் பகுதியில் சில நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் மிதமான மழையும் பகல் நேரங்களில் வெயிலும் காணப்பட்டது. இதனால் தேயிலை விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதேபோல் காபி செடிகளும் பூக்க தொடங்கின. ஆனால் காபி செடிகளுக்கு ஏற்ற மழை பெய்யாததால் காபி பூக்கள் கருகின. இதனால் விளைச்சல் பாதிக்கும் என காபி விவசாயி கள் கவலை அடைந்தனர்.*

*பஜ்ஜி மிளகாய் அழுகல்*

*ஒருபுறம் மகிழ்ச்சியையும், மறுபுறம் கவலையையும் கோடை மழை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கூடலூர் பகுதியில் சுமார் 2 மணி*

நேரம் கனமழை பெய்தது. இதனால் நகரில் வெப்பம் தணியும் என்று பார்த்த நிலையில் மாறாக பகல் நேரத்தில் கடும் வெயில் சுட்டெரித்தது.
மேலும் மிதமான வெப்பத் தில் வளரக்கூடிய பஜ்ஜி மிளகாய் செடிகளும் நன்கு காய்த்திருந்த நிலையில் இரவு நேரங்களில் பெய்து வரும் சாரல் மழையில் நனைந்து விடுவதால் மிளகாய்கள் அழுகி வருகின்றன.
கூடலூர் கோத்தர்வயல், தொரப்பள்ளி உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் பயிரிட்டுள்ள செடிகளில், பழுப்பு நிறத்தில் மிளகாய்கள் மாறி தானாகவே கீழே உதிர்ந்து விடுகின்றன.
இதனால் பஜ்ஜி மிளகாய் பயிரிட்டுள்ள விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

## கூடலூர் பகுதியில் காய்த்து குலுங்குகின்றன நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் செர்ரி பழங்கள்



கூடலூர் பகுதியில் காய்த்து குலுங்கும் இந்தியன் செர்ரி பழங்கள்.

கூடலூர், ஏப்.26–
நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் இந்தியன் செர்ரி பழங்கள் கூடலூர் பகுதியில் காய்த்து குலுங்குகின்றன.
காய்த்து குலுங்கும் செர்ரி
நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் மலைகாய்கறிகள் அதிகளவு விளைகின்றன. ஆனால் கூடலூர் பகுதியில் இருகாலநிலைகள் நிலவுவதால் மலை காய்கறிகளோடு சமவெளி பகுதி காய்கறிகளும் சேர்த்து விளைவிக்கப்ப டுகின்றன. கூடலூர் மற்றும் வனப்பகுதிகளில் தற்போது பலா காய்கள் சீசன்

தொடங்கியுள்ள நிலையில் இந்தியன் செர்ரி பழங்கள் சீசனும் தொடங்கி உள்ளது.கூடலூர் ஜீன்பூல் மையத்தில் அதிகளவு இந்தியன் செர்ரி பழ மரங்கள் உள்ளன. இந்த மரங்களில் ஏராளமான பழங்கள் காய்த்து பழுத்துள் ளன. சிவப்பு கலரில் தொங்கும் இந்த பழங்கள் நெல்லிக்காய் போன்ற தோற்றத்துடன் காணப்படுகிறது. மிகவும் குளிர்ச்சியை ஏற்படுத்தும் தன்மை கொண்ட இந்தியன் செர்ரி பழங்கள் சமவெளி பகுதிகளிலும் நன்கு வளரக்கூடியது.

நோய் எதிர்ப்பு சக்தி

இந்தியன் செர்ரி என அழைக்கக்கூடிய இவ்வகை பழங்களை மனிதர்கள் உட்கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கும் என சித்த மருத்துவம் கூறியுள்ளது. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பூக்கும் இந்தியன் செர்ரி மரங்கள் ஏப்ரல், மே மாதங்களில் காய்த்து பழுக்க தொடங்கி விடும்.

நன்கு சிவப்பு கலரில் காணப்படுவதால் சுற்றுலா பயணிகளை மட்டுமின்றி பொதுமக்களையும் நன்கு கவர்ந்து வருகிறது இந்தியன் செர்ரி பழங்கள். புத்திர ஜீவன் பழங்கள் என்றும் சிலர் அழைக்கிறார்கள். சிறந்த ஆண்மை ஊக்கியாகவும் இவ்வகை பழங்கள் விளங்குவதாக கூறப்படுகிறது. ஆனால் இது குறித்து விசாரித்த போது அதில் உண்மை இல்லை என்றே தெரிகிறது.

## நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் கோத்தகிரியில் நடந்த கருத்தரங்கில் தீர்மானம்

கோத்தகிரி, ஏப்.26–

நீலகிரி மாவட்டத்தில் நீர்நிலைகளை பாது காக்க வேண்டும் என்று கோத்தகிரியில் நடந்த புவி நாள் விழா கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கருத்தரங்கு

கோத்தகிரியில் உள்ள ஐலண்ட் அறக்கட்டளை அரங்கில் உலக புவி நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இயற்கையின் இமைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு, தமிழ்நாடு பாண்டிச்சேரி சமூக செயல்பாட்டு இயக்கம் ஆகியவை இணைந்து நடத்திய இந்த கருத்தரங்கிற்கு சமூக செயல்பாட்டு இயக்க தமிழ் மாநில முதன்மை அமைப்பாளர் ரெங்கநாதன் தலைமை தாங்கினார். சுற்றுச்சூழல் ஒருங்கிணைப் பாளர் பாலசுப்ரமணியம் வரவேற்றார்.

உலக புவி நாளின் முக்கியத் துவத்தை ஐலண்ட் அறக்கட்டளை நிர்வாக செயலாளர் அல்போன்ஸ் ராஜ் விளக்கினார். கடலும், கடலை சார்ந்த பருவ நிலை மாற்றம் குறித்து ஹீல் அமைப்பின் இயக்குனர் சிலுவை வஸ்தியன் கூறினார். தொடர்ந்து பாண்டிச்சேரி சமூக செயல்பாட்டு இயக்க அமைப்பாளர் ஜோசப் விக்டர், மாநில அமைப்பாளர் சிவபிரகாசம், புளூமவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு குழு செயலாள் ராஜன் உள்பட பலர் பேசினார்கள்.

நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும்

கருத்தரங்கில் நீலகிரி மாவட்டத்தில் பாலித்தீன் பை ஒழிப்புக்கு அரசு அதிகாரி களுடன் பொது நல அமைப்புகள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் வட்டார அளவில் குழு அமைத்து கண்காணித்து பாலிதீன் பயன்பாடு இல்லாத மாவட் டமாக மாற்ற

நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் எஞ்சியிருக்கும் ஆறுகள், ஓடைகள் மற்றும் நீர்நிலைகளை பாதுகாக்க ஆக்கிரமிப்புகளை அகற்றி, கழிவுகள் கலக்காமல் இருக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிமுறை மீறி கட்டப்பட்ட கட்டிடங்களை கோர்ட்டு உத்தரவு படி அகற்ற வேண்டும்.

தடை செய்ய வேண்டும்

கோத்தகிரி பகுதியில் எல்லை புறங்களில் பசுமை காடுகள் உள்ளன. இந்த காடுகளையொட்டிய பகுதி களில் வியாபார ரீதியில் கட்டிடங்கள், தங்கும்விடுதி கள் கட்டுவதை முழுமையாக தடை செய்ய வேண்டும்.

விவசாய நிலங்களை விவசாய பயன்பாட்டிற்கு மட்டுமே வாங்க விற்க முடியும் என்று கர்நாடகாவில் சட்டம் அமுலில் உள்ளது. இதே போல் தமிழ்நாட்டிலும் சட்டம் கொண்டு வர வேண்டும். தோட்டக்கலை துறை மூலம் நீலகிரி மாவட் டத்தில் இலவசமாக பழ மரக்கன்றுகள் வழங்க மா நில அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. கருத்தரங்கில் சாந்தி நீதி கேந்திரா, நீலகிரி ஆதிவாசி சங்கம், பாலர் சேவா மையம், கோத்தகிரி குடிமக்கள் சங்கம், கோத்தகிரி ஜூனியர் சேம்பர், இசை அறக்கட்டளை, தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு உள்பட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் சமூக செயல்பாடு இயக்க நீலகிரி மாவட்ட அமைப்பாளர் சாராள் நன்றி கூறினார்.